**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI</u>**

**<u>MCOP. No.177/2023</u>**

**<u>C/W MCOP. No.197/2023 C/W MCOP. No.182/2023 C/WMCOP. No.5/2024</u>**

**<u>PW - 1</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : P.அய்யாச்சாமி | | : | |
| **Father Name** | : பரமசிவம் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of September 2025.)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 17.07.2023-ம் தேதியிட்ட காயச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1

2. மனுதாரருக்கு Dr.Muthus மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ குறிப்பு மற்றும் Radiology Report அசல் ம.சா.ஆ.2

3. மனுதாரரின் மருத்துவமனை மற்றும் மருந்து பில்கள் மொத்தம் ரூ.7,717/- அசல் ம.சா.ஆ.3

4. மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.4

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு மனுவில் கோரிய படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். நான் பயணம் செய்த ஆட்டோ பிரகாஷ் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பகல் நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடானது நேரான ரோடு தான் என்றால் சரிதான். விபத்து சமயம் அங்கு ALTO கார் நின்று கொண்டிருந்தது என்றால், நின்று கொண்டிருந்த கார் திடீரென்று நிறுத்தி விட்டார்கள். ஆட்டோவை ஓட்டிச்சென்ற பிரகாஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா? என்று எனக்குத் தெரியாது. ALTO காரை ஓட்டி வந்த 1–ம் எதிர்மனுதாரர் முறையாக இன்டிகேட்டரை போட்டு தான் சாலையில் இடதுபுற ஓரமாக நிறுத்தியிருந்தார் என்றும், அவ்வாறு நிறுத்தியிருந்த காரை பின்புறமாக பிரகாஷ் ஆட்டோவை ஓட்டிச்சென்று மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், இந்த விபத்திற்கு காரணம் பிரகாஷ் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தது தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால், நான் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லப்பட்டுள்ள தொகையை அதிகப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்து சமயம் என்ன வேலை செய்து வந்தேன் என்றும், எவ்வளவு மாத சம்பளம் பெற்று வந்தேன் என்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளது போல எனக்கு எந்தவொரு வேலையும் இல்லை,

எனக்கு வருமானமும் இல்லை என்பதால் தான் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவக்குறிப்பில் எனக்கு எந்தவொரு எலும்பு முறிவும் ஏற்பட்டதாக குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாராண காயங்கள் என்றும், அந்த காயங்கள் சரியாகி விட்டது என்றும், வழக்கிற்காக வேண்டி அந்த காயங்களினால் உபாதைகள் இன்னும் நீடித்து கொண்டு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் இந்த மனுவில் கோரியுள்ளபடி நஷ்ட ஈடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது ஆட்டோ ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையால் ஏறப்ட்டுள்ளதால் அந்த ஆட்டோவின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் மற்றும் காப்பீட்டாளர் ஆகியோருக்கு எதிராக தான் இழப்பீடு கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆட்டோவின் உரிமையாளரையும், ஓட்டுநரையும், காப்பீட்டாளரையும் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.18 15:10:46 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**MCOP. No.182/2023**

**C/W MCOP. No.197/2023 C/W MCOP. No.177/2023 C/WMCOP. No.5/2024**

**PW - 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : A.லதாமணி | | : | |
| **Husband Name** | : அய்யாசாமி | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of September 2025.)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2-ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 17.07.2023-ம் தேதியிட்ட காயச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5

2. மனுதாரருக்கு Dr.Muthus மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ.6

3. மனுதாரரின் மருத்துவமனை மற்றும் மருந்து பில்கள் மொத்தம் ரூ.14,554/- அசல் ம.சா.ஆ.7

4. மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.8

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு மனுவில் கோரிய படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். நான் மாதம் ரூ.15,000/- வருமானம் பெற்று வருகிறேன் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பகல் நேரத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். விபத்து சமயம் நாங்கள் சென்ற ஆட்டோவிற்கு முன்பாக ரோட்டின் இடதுபுற ஓரத்தில் ஒரு ALTO கார் இருந்ததாக என்றால், அது நின்று கொண்டிருந்ததா? சென்று கொண்டிருந்ததா? என்று எனக்கு தெரியவில்லை. ALTO காரை ஓட்டி வந்த 1-ம் எதிர்மனுதாரர் முறையாக இன்டிகேட்டரை போட்டு தான் சாலையில் இடதுபுற ஓரமாக நிறுத்தியிருந்தார் என்றும், அவ்வாறு நிறுத்தியிருந்த காரை பின்புறமாக பிரகாஷ் ஆட்டோவை ஓட்டிச்சென்று மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், இந்த விபத்திற்கு காரணம் பிரகாஷ் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தது தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால், நான் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லப்பட்டுள்ள தொகையை அதிகப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்து சமயம் என்ன வேலை செய்து வந்தேன் என்றும், எவ்வளவு மாத சம்பளம் பெற்று வந்தேன் என்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளது போல எனக்கு எந்தவொரு வேலையும் இல்லை, எனக்கு வருமானமும் இல்லை என்பதால் தான் அது சம்பந்தப்பட்ட

ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவக்குறிப்பில் எனக்கு எந்தவொரு எலும்பு முறிவும் ஏற்பட்டதாக குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான்.நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக வேண்டி தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாராண காயங்கள் என்றும், அந்த காயங்கள் சரியாகி விட்டது என்றும், வழக்கிற்காக வேண்டி அந்த காயங்களினால் உபாதைகள் இன்னும் நீடித்து கொண்டு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் இந்த மனுவில் கோரியுள்ளபடி நஷ்ட ஈடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது ஆட்டோ ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையால் ஏறப்ட்டுள்ளதால் அந்த ஆட்டோவின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் மற்றும் காப்பீட்டாளர் ஆகியோருக்கு எதிராக தான் இழப்பீடு கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆட்டோவின் உரிமையாளரையும், ஓட்டுநரையும், காப்பீட்டாளரையும் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.18 15:10:54 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**MCOP. No.197/2023**

**C/w MCOP. No.177/2023,C/w MCOP. No.182/2023 C/w MCOP. No.5/2024**

**PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | R.பிரகாஷ் | | : | |
| **Father Name** | : | ரவிச்சந்திரன் | | : | |
| **Village** | : | | **Calling** | : | |
| **Taluk** | : | | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of September 2025.)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3-ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 18.07.2023-ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.9

2. 04.09.2023-ம் தேதியிட்ட இறுதி அறிக்கை (Final Report) கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.10

3. 22.07.2023-ம் தேதியிட்ட காயச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.11

4. 19.07.2023-ம் தேதியிட்ட 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 43 D2 669) கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.12

5. மாதிரி வரைபடம் கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.13

6. TN 43D 2669 (Alto K10-Car) 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு நகல் ம.சா.ஆ.14

7. TN 43D 2669 (Alto K10-Car) 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.15

8. 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.16

9. மனுதாரருக்கு Dr.Muthus மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ விடுப்பு அறிக்கை (Discharge Summary) அசல் ம.சா.ஆ.17

10. மனுதாரரின் மருத்துவமனை மற்றும் மருந்து பில்கள் மொத்தம் ரூ.1,39,450/- அசல் ம.சா.ஆ.18

11. மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.19

12. மனுதாரர் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.20

13.10.10.2023-ம் தேதியிட்ட குற்ற வழக்கு எண்.STC.No.1745/2023-ன் உத்தரவு ஆன்லைன் பதிவேடு சுருக்கம் ம.சா.ஆ.21

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு மனுவில் கோரிய படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் ஆட்டோ டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். நான் எனது மனுவில் கூலி வேலை செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆட்டோ ஓட்டும் கூலி வேலை செய்து வந்தேன். நான் ஆட்டோ ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கான பேட்ச்சை தாக்கல் செய்துள்ளேன். நான் ஆட்டோவை நகரத்திற்குள் இயக்குவதற்குரிய

அனுமதியின் சான்றை தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. விபத்து பகல் நேரத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு முன்பும், பின்பும் சுமார் 50 மீட்டருக்கு ரோடு நேராக தான் உள்ளது என்றால் சரிதான். அதனால், எதிரில் வரும் வண்டியும், எனது ஆட்டோவிற்கு முன்பாக செல்லும் வண்டியும் நன்றாக தெரிந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் விபத்தான ரோட்டின் இடது ஓரத்தில் தான் நடந்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயம் நான் ஓட்டிச்சென்ற ஆட்டோ Alto காரின் பின்புறத்தில் மோதியது என்றால் சரிதான்.

2. இந்த விபத்து சம்பந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் TN 43 D 2669 என்ற ALTO கார் சாலையின் இடதுபுறமாக நின்றுகொண்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால், ஏற்கனவே நின்றுகொண்டிருந்த ALTO காரை நான் பார்க்காமல் நான் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று காரின் பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த காரின் டயரில் சத்தம் ஏற்பட்டதன் காரணமாக பார்க்கிங் இண்டிகேட்டரை போட்டு விட்டு காரை ரோட்டின் இடது ஓரமாக நிறுத்தி டயரை பார்த்துக்கொண்டிருந்த போது தான் நான் அதிவேகமாக சென்று காரின் பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சேலம் – கோவை செல்லும் ஆறு வழிச்சாலையில் தெக்கலூர் அருகில் வைத்து விபத்து நடந்தது. நின்றுகொண்டிருந்த ALTO காரின் பின்புறமாக மோதி விபத்து ஏற்படுத்தியதன் விளைவாக தான் எனக்கும், எனது ஆட்டோவில் பயணம் செய்த அய்யாச்சாமி, மாலதிதேவி மற்றும் லதாமணி ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த

விபத்தை நான் தான் ஏற்படுத்தினேன் என்றும், அதை மறைத்து விட்டு பொய்யாக கார் ஓட்டுநர் மீது புகார் கொடுத்து பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொல்லப்பட்டுள்ள தொகையை அதிகப்படுத்தி கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு கண் பார்வை நன்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு விபத்து பகல் நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். நான் ஆட்டோவை மெதுவாக இயக்கியிருந்தால் எதிரே வாகனம் நின்றுகொண்டிருப்பது நன்கு தெரிந்திருக்கும் என்றும், அதனால் அந்த விபத்தை தவிர்த்திருக்க முடியும் என்றும், ஆனால் நான் தான் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஆட்டோவை ஓட்டிச்சென்று ஏற்கனவே ரோட்டின் இடது ஓரமாக நின்றுகொண்டிருந்த காரின் பின்புறமாக மோதி விபத்து ஏற்படுத்தி விட்டேன் என்றும், அதனால் இந்த வழக்கு விபத்திற்கு முழு பொறுப்பு நான் தான் என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற ஆட்டோ எனக்கு சொந்தமானது தான். அதனால் அந்த ஆட்டோ மூலம் எவ்வளவு வருமானம் ஈட்டி வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாதம் ரூ.20,000/- வருமானம் சம்பாதித்து வந்ததாக வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றும், அதுபோல் நான் வருமானம் எதுவும் ஈட்டவில்லை என்றால் சரியல்ல. விபத்து 2023-ம் ஆண்டு நடந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எனது மருத்துவ குறிப்பில் நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கெண்டதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி நன்றகா உள்ளேன்

என்றும், வழக்கிற்காக வேண்டி இயலாமை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவின் காப்பீட்டு நிறுவனத்தை சேர்க்காததால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னால் தான் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த மனுவில் நான் கோரியுள்ள இழப்பீட்டை 2–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.18 15:11:03 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**MCOP. No.5/2024**

**C/w MCOP. No.197/2023 C/w MCOP. No.182/2023 C/w MCOP. No.177/2023**

**PW - 4**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : P.மாலதிதேவி | | : | |
| **Husband Name** | : பிரகாஷ் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of September 2025.)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 4-ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 19.07.2023-ம் தேதியிட்ட காயச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.22

2. மனுதாரருக்கு Dr.Muthus மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ விடுவிப்பு அறிக்கை (Discharge Summary) அசல் ம.சா.ஆ.23

10. மனுதாரரின் மருத்துவமனை மற்றும் மருந்து பில்கள் மொத்தம் ரூ.54,926/- அசல் ம.சா.ஆ.24

11. மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.25

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு மனுவில் கோரிய படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். நான் பயணம் செய்த ஆட்டோ பிரகாஷ் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான்.அந்த பிரகாஷ் எனது உறவினர் என்றால் சரிதான். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பகல் நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடானது நேரான ரோடு தான் என்றால் சரிதான். விபத்து சமயம் அங்கு ALTO கார் நின்று கொண்டிருந்தது என்றால், நின்று கொண்டிருந்த கார் திடீரென்று நிறுத்தி விட்டார்கள். ஆட்டோவை ஓட்டிச்சென்ற பிரகாஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா? என்று எனக்குத் தெரியாது. ALTO காரை ஓட்டி வந்த 1–ம் எதிர்மனுதாரர் முறையாக இன்டிகேட்டரை போட்டு தான் சாலையில் இடதுபுற ஓரமாக நிறுத்தியிருந்தார் என்றும், அவ்வாறு நிறுத்தியிருந்த காரை பின்புறமாக பிரகாஷ் ஆட்டோவை ஓட்டிச்சென்று மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், இந்த விபத்திற்கு காரணம் பிரகாஷ் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தது தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால், நான் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லப்பட்டுள்ள தொகையை அதிகப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயம் என்ன வேலை செய்து வந்தேன் என்றும், எவ்வளவு மாத சம்பளம் பெற்று வந்தேன் என்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான். நான்

மனுவில் சொல்லியுள்ளது போல எனக்கு எந்தவொரு வேலையும் இல்லை, எனக்கு வருமானமும் இல்லை என்பதால் தான் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவக்குறிப்பில் எனக்கு எந்தவொரு எலும்பு முறிவும் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாராண காயங்கள் என்றும், அந்த காயங்கள் சரியாகி விட்டது என்றும், வழக்கிற்காக வேண்டி அந்த காயங்களினால் உபாதைகள் இன்னும் நீடித்து கொண்டு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் இந்த மனுவில் கோரியுள்ளபடி நஷ்ட ஈடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது ஆட்டோ ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையால் ஏறப்ட்டுள்ளதால் அந்த ஆட்டோவின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் மற்றும் காப்பீட்டாளர் ஆகியோருக்கு எதிராக தான் இழப்பீடு கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆட்டோவின் உரிமையாளரையும், ஓட்டுநரையும், காப்பீட்டாளரையும் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.18 15:11:11 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**